**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.01.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயந்திரமயமாக்குதலுக்கு உகந்த பருத்தி ரகம் குறித்த பயிற்சி

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பருத்தித்துறை, பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் இயக்குநரகம் மற்றும் பயிற்சி பிரிவு, வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் இணைந்து, இயந்திரமயமாக்குதலுக்கு ஏற்ற பருத்தி ரகமான **கோ 17** குறித்து, கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 20.01.2026 அன்று பயிற்சி வழங்கினர். இந்நிகழ்ச்சியின் தொடக்க விழாவில், பருத்தித்துறை பேராசிரியர் மற்றும் தலைவர் **முனைவர் அ. சுப்பிரமணியன்** அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி, பருத்தி பயிரின் சாகுபடி பரப்பளவு குறைந்து வருவது குறித்தும், அதனைத் தடுப்பதற்காக இயந்திரமயமாக்குதல் இன்றியமையாததாக உள்ளதைப் பற்றியும் எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து, பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குநர் **முனைவர் இரா. ரவிகேசவன்** அவர்கள் தனது சிறப்புரையில், இந்தியாவில் பருத்தி பயிரின் தொன்மை, தமிழ்நாடு மற்றும் கோவை பகுதியில் பருத்தி சாகுபடியின் வரலாற்றுச் செழுமை, தற்போதைய நிலையில் குறைந்து வரும் பருத்தி சாகுபடி பரப்பளவு மற்றும் அதனை அதிகரிக்க கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விரிவாக விளக்கினார். வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தின் இயக்குநர் **முனைவர் பி.பொ. முருகன்** அவர்கள், வேளாண்மையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், இயற்கை மற்றும் அங்கக வேளாண்மை போன்ற புதிய அணுகுமுறைகள், வேளாண் சந்தைப்படுத்தலின் முக்கியத்துவம் மற்றும் பருத்தி சாகுபடியில் இயந்திரமயமாக்குதலின் மூலம் கிடைக்கும் பலன்கள் குறித்து தனது சிறப்புரையில் எடுத்துரைத்தார். இறுதியாக, பயிற்சி பிரிவு பேராசிரியர் மற்றும் தலைவர் **முனைவர் ந. அனந்தராஜா** அவர்கள் நன்றியுரை வழங்கினார். தொடக்க விழாவைத்

தொடர்ந்து, விவசாயிகளுக்கு வயல்வெளி அடிப்படையிலான பயிற்சியும் வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சியில், இயந்திரமயமாக்குதலுக்கு உகந்ததாக பருத்தித்துறையால் வெளியிடப்பட்ட **கோ 17** பருத்தி ரகத்தின் சிறப்பம்சங்களை, பருத்தித்துறை இணைப் பேராசிரியர் **முனைவர் ந. பிரேமலதா** அவர்கள் விளக்கினார். மேலும், இத்துறையின் பேராசிரியர் **ந. வடிவேல்** அவர்கள் இயந்திர சாகுபடிக்குத் தேவையான உழவியல் தொழில்நுட்பங்கள் குறித்தும், **முனைவர் இ. ராஜேஸ்வரி** அவர்கள் பருத்தி பயிரில் கடைப்பிடிக்க வேண்டிய பூச்சி மற்றும் நோய் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்தும், பண்ணை இயந்திரவியல் உதவிப் பேராசிரியர் **முனைவர் தம்பிதுரை** அவர்கள் பருத்தி சாகுபடியில் பயன்படும் பல்வேறு இயந்திரங்கள் குறித்தும் விளக்கினர். இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற சுமார் **40 விவசாயிகள்**, கோ 17 பருத்தி ரகத்தின் செயல்விளக்கத்தைக் கண்டும், பருத்தி சாகுபடி தொடர்பான தங்களது சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றும், பயனடைந்தனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***